
உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

# மழை வேண்டல் திருப்பதிகங்கள்




விரோதி வருடம் பங்குனித் திங்கள் 30ம் நாள்
காரைநகர் மருதடி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலயத்தில்
நடைபெற்ற பன்னிரு திருமுறை முற்றோதல்

## நிறைவு வைபவ மலர்

13.04.2010


வெளியீடு
அகில இலங்கைத் திருமுறை மன்றம்
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்.

# மழைவேண்டல் திருப்பதிகங்கள்



நால்வர் பொற்றாள் எம்முயிர்த் துணையே

விரோதி வருடம் பங்குனித்திங்கள் 30ம் நாள்

பன்னிருதிருமுறை முற்றோதல் நிறைவு வைபவ

# மலர்

13.04.2010

வெளியிடுபவர்
அகில இலங்கைத் திருமுறைமன்றம்.
102 அரசடி வீதி, கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

திருச்சிற்றம்பலம்.

## பதிப்புரை

அருளாளர்களாகிய மூவர் முதலிகளும்,
அருளிச் செய்த அருட்பாடல்கள் எல்லாம் மக்களை வழம் பெறச் செய்பவை. இம்மைக்கும், மறுமைக்கும் ஊதியம் தருபவை. சைவத் திருமுறைகளில் விளங்குகின்ற பண்கள், அவற்றைப் பாடுகின்றவர்கள் அப்பண்களிற்குரிய பயனைப் பெறுவர். இம்மையிலே உலகியல் சிறப்புக்களைத் தருபவையாகவும், மறுமைக்குரிய செம்மையையும் தரும் ஆற்றல் பெற்றவை அவை.

உலகில் மழை பெய்யவும், செழிப்பு மேலோங்கவும் மேகராகக் குறிஞ்சிப் பண்ணில் அமைந்த தேவாரப் பதிகங்கள் ஆற்றல் பெற்றவை என்பது யாவரு மறிந்தவுண்மை. எம் நாட்டில் மழைவளம் பெருகி, நல்வழம் பெற அனைவரும் இத்திருப்பதிகங்களை தம்மாலியன்ற மட்டில் ஓதிப் பயன்பெற வேண்டும் என்ற நோக்கிலே இத்திருப்பதிகங்கள் பன்னிரு திருமுறை முற்றோதல் பூர்த்தி விழா மலராக வெளிவருகின்றது. அனைவரும் இவ்வெளியீட்டுப பிரதியினைப் பெற்றுப் பயன்பெறுமாறு வேண்டுகின்றோம்.

இவ் வெளியீடு வெளிவர அனுசரணையாக இருந்த அடியார்க்கமுதூட்டும் அண்ணலார் க.சிவபாலனுக்கு திருமுறைமன்றம் நன்றிக்கடப்பாடுடையதாகும்.

செ.பாலச்சந்திரன்
செயலாளர்
(அகில இலங்கைத் திருமுறைமன்றம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்.

# மழைவேண்டல் பதிகங்கள்

## திருக்கழுமலம்:

பண்:- மேகராகக்குறிஞ்சி இராகம்:- நீலாம்பரி

திருச்சிற்றம்பலம்

சேவுயருந் திண்கொடியான் றிருவடியே
சரணென்று சிறந்த வன்பால்
நாவியலு மங்கையொடு நான்முகன்றான்
வழிபட்ட நலங்கொள் கோயில்
வாவிதொறும் வண்கமல முகங்காட்டச்
செங்குமுதம் வாய்கள் காட்டக்
காவியிருங் கருங்குவளை கருநெய்தல்
கண்காட்டுங் கழுமலமே.

பெருந்தடங்கண் செந்துவர்வாய்ப் பீடுடைய
மலைச்செல்வி பிரியாமேனி
அருந்தகைய சுண்ணவெண்ணீ றலங்கரித்தா
னமரர்தொழ வமருங்கோயில்
தருந்தடக்கை முத்தழலோர் மனைக டொறு
மிறைவனது தன்மைபாடிக்
கருந்தடங்கண் ணார்கழல்பந் தம்மானைப்
பாட்டயருங் கழுமலமே.

அலங்கன்மலி வானவருந் தானவரு
மலைகடலைக் கடையப்பூதங்
கலங்கவெழு கடுவிடமுண் டிருண்டமணி
கண்டத்தோன் கருதுங்கோயில்
விலங்கலமர் புயன்மறந்து மீன்சனிபுக்
கூன்சலிக்குங் காலந்தானுங்
கலிங்கலிலா மனப்பெருவண் கையுடைய
மெய்யர்வாழ் கழுமலமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரிதனை நலித்தமரர் பயமெய்தச்
சயமெய்தும் பரிசுவெம்மைப்
போரிசையும் புரமூன்றும் பொன்றவொரு
சிலைவளைத்தோன் பொருந்துங்கோயில்
வாரிசைமென் முலைமடவார் மாளிகையின்
சூளிகைமேல் மகப்பாராட்டக்
காரிசையும் விசும்பியங்குங் கணங்கேட்டு
மகிழ்வெய்துங் கழுமலமே.

ஊர்கின்ற வரவமொளி விடுதிங்களொடு
வன்னி மத்தமன்னும்
நீர்நின்ற கங்கைநகு வெண்டலைசேர்
செஞ்சடையானி கழுங்கோயில்
ஏர்தங்கி மலர்நிலவி யிசைவெள்ளி
மலையென்ன நிலவிநின்ற
கார்வண்டின் கணங்களாற் கவின்பெருகு
சுதைமாடக் கழுமலமே.

தருஞ்சரதந் தந்தருளென் றடிநினைந்து
தழலணைந்து தவங்கள்செய்த
பெருஞ்சதுரர் பெயலாக்கும் பீடார்தோழமை
யளித்த பெருமான்கோயில்
அரிந்தவய லரவிந்தம் மதுவுகுப்ப
வதுகுடித்துக் களித்துவாளை
கருஞ்சகடமி ளகவளர் கரும்பிரிய
அகம்பாயுங் கழுமலமே.

புவிமுதலைம் பூதமாய்ப் புலனைந்தாய்
நிலனைந்தாய்க் கரணநான்காய்
அவையவைசேர் பயனுருவா யல்லவுருவாய்
நின்றா னமருங்கோயில்
தவமுயல்வோர் மலர்பறிப்பத் தாழவிடு
கொம்புதைப்பக் கொக்கின் காய்கள்
கவணெறிகற் போற்சுனையிற் கரைசேரப்
புள்ளிரியுங் கழுமலமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடல்வந்த வானவரை யழித்துலகு
தெழித்துழலும் மரக்கர்கோமான்
மிடல்வந்த இருபதுதோ ணெரியவிரற்
பணிகொண்டோன் மேவுங்கோயில்
நடவந்த வழவரிது நடவொணா
வகைபரலாய்த் தென்றுதுன்று
கடல்வந்த சங்கீன்ற முத்துவயற்
கரைகுவிக்குங் கழுமலமே.

பூமகடன் கோனயனும் புள்ளினொடு
கேழலுரு வாகிப்புக்கிட்
டாமளவுஞ் சென்றுமுடி யடிகாணா
வகைநின்றா னமருங்கோயில்
பாமருவுங் கலைப்புலவோர் பன்மலர்கள்
கொண்டணிந்து பரிசினாலே
காமனைகள் பூரித்துக் களிகூர்ந்து
நின்றேத்துங் கழுமலமே.

குணமின்றிப் புத்தர்களும் பொய்த்தவத்தை
மெய்த்தவமாய் நின்றுகையில்
உணன்மருவுஞ் சமணர்களு முணராத
வகைநின்றா னுறையுங்கோயில்
மணமருவும் வதுவையொலி விழவினொலி
யிவையிசைய மண்மேற்றேவர்
கணமருவு மறையினொலி கீழ்ப்படுக்க
மேற்படுக்குங் கழுமலமே.

கற்றவர்கள் பணிந்தேத்துங் கழுமலத்து
ளீசன்றன் கழல்மேனல்லோர்
நற்றுணையாம் பெருந்தன்மை ஞானசம்
பந்தன்றானயந்து சொன்ன
சொற்றுணையோ ரைந்தினொடைந் திவைல்லார்
தூமலரா டுணைவராகி
முற்றுலக மதுவாண்டு முக்கணா
னடிசேர முயல்கின்றாரே.

திருச்சிற்றம்பலம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

## திருவையாறு

**பண்:- மேகராகக்குறிஞ்சி** **இராகம்:-நீலாம்பரி**

திருச்சிற்றம்பலம்.

புலனைந்தும் பொறிகலங்கி நெறிமயங்கி
யறிவழிந்திட் டைம்மேலுந்தி
அலமந்த போதாக வஞ்சேலென்
றருள்செய்வா னமருங்கோயில்
வலம்வந்த மடவார்க ணடமாட
முழவதிர மழையென்றஞ்சிச்
சிலமந்தி யலமந்து மரமேறி
முகில்பார்க்குந் திருவையாறே.

விடலேறு படநாக மரைக்கசைத்து
வெற்பரையன் பாவையோடும்
அடலேறொன் றதுவேறி யஞ்சொலீர்
பலியென்னு மடிகள் கோயில்
கடலேறித் திரைமோதிக் காவிரியி
னுடன்வந்து கங்குல்வைகித்
திடலேறிச் சுரிசங்கஞ் செழுமுத்தங்
கீன்றலைக்குந் திருவையாறே

கங்காளர் கயிலாய மலையாளர்
கானப்பே ராளர்மங்கை
பங்காளர் திரிசூலப் படையாளர்
விடையாளர் பயிலுங்கோயில்
கொங்காளப் பொழினுழைந்து கூர்வாயால்
இறகுலர்த்திக் கூதனீங்கிச்
செங்கானல் வெண்குருகு பைங்கான
லிரைதேருந் திருவையாறே

ஊன்பாயு முடதலைகொண் டூரூரின்
பலிக்குழல்வா ருமையாள்பங்கர்
தான்பாயும் விடையேறுஞ் சங்கரனார்
தழலுருவர் தங்குங்கோயில்
மான்பாய வயலருகே மரமேறி
மந்திபாய மடுக்க டோறும்
தேன்பாய மீன்பாயச் செழுங்கமல
மொட்டலருந் திருவையாறே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீரோடு கூவிளமு நிலாமதியும்
வெள்ளெருக்கும் நிறைந்த கொன்றைத்
தாரோடு தண்கரந்தை சடைக்கணிந்த
தத்துவனார் தங்குங்கோயில்
காரோடி விசும்பளந்து கடிநாறும்
பொழிலணைந்த கமழ்தார்வீதித்
தேரோடு மரங்கேறிச் சேயிழையார்
நடம்பயிலுந் திருவையாறே.

வேந்தாகி விண்ணவர்க்கு மண்ணவர்க்கும்
நெறிகாட்டும் விகிர்தனாகிப்
பூந்தாம நறுங்கொன்றை சடைக்கணிந்த
புண்ணியனார்நண்ணுங் கோயில்
காந்தார மிசையமைத்துக் காரிகையார்
பண்பாடக் கவினார்வீதித்
தேந்தாமென் றரங்கேறிச் சேயிழையார்
நடமாடுந் திருவையாறே.

நின்றுலா நெடுவிசும்பி னெருக்கிவரு
புரமூன்று நீள்வாயம்பு
சென்றுலாம் படிதொட்ட சிலையாளி
மலையாளி சேருங்கோயில்
குன்றெலாங் குயில்கூவக் கொழும்பிரச
மலர்பாய்ந்து வாசமல்கு
தென்றலா ரடிவருடச் செழுங்கரும்பு
கண்வளருந் திருவையாறே.

அஞ்சாதே கயிலாய மலையெடுத்த
அரக்கர்கோன் றலைகள்பத்தும்
மஞ்சாடு தோணெரிய வடர்த்தவனுக்
கருள்புரிந்த மைந்தர்கோயில்
இஞ்சாய லிளந்தெங்கின் பழம்வீழ
விளமேதி யிரித்தங்கோடிச்
செஞ்சாலிக் கதிருழக்கிச் செழுங்கமல
வயல்படியுந் திருவையாறே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலோடி விசும்பணவி வியனிலத்தை
மிக வகழ்ந்து மிக்குநாடும்
மாலோடு நான்முகனு மறியாத
வகைநின்றான் மன்னுங்கோயில்
கோலோடக் கோல்வளையார் கூத்தாடக்
குவிமுலையார் முகத்தினின்று
சேலோடச் சிலையாடச் சேயிழையார்
நடமாடுந் திருவையாறே.

குண்டாடு குற்றுடுக்கைச் சமணரொடு
சாக்கியருங் குணமொன்றில்லா
மிண்டாடு மிண்டருரை கேளாதே
யாளாமின் மேவித் தொண்டீர்
எண்டோளர் முக்கண்ண ரெம்மீச
ரிறைவரினி தமருங்கோயில்
செண்டாடு புனற்பொன்னிச் செழுமணிகள்
வந்தலைக்குந் திருவையாறே.

அன்னமலி பொழில்புடைசூ ழையாற்றெம்
பெருமானை யந்தண்காழி
மன்னியசீர் மறைநாவன் வளர்ஞான
சம்பந்தன் மருவுபாடல்
இன்னிசையா லிவைபத்து மிசையுங்கா
லீசனடி யேத்துவார்கள்
தன்னிசையோ டமருலகிற் றவநெறிச்சென்
றெய்துவார் தாழாதன்றே.

**திருச்சிற்றம்பலம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

## திருமுதுகுன்றம்

பண்:- மேகராகக்குறிஞ்சி இராகம்:-நீலாம்பரி

திருச்சிற்றம்பலம்.

மெய்த்தாறு சுவையுமே ழிசையுமெண்
குணங்களும் விரும்புநால்வே
தத்தாலு மறிவொண்ணா நடைதெளியப்
பளிங்கேபோ லரிவைபாகம்
ஒத்தாறு சமயங்கட் கொருதலைவன்
கருதுமூ ருலவுதெண்ணீர்
முத்தாறு வெதிருதிர நித்திலம்வா
ரிக்கொழிக்கு முதுகுன்றமே

வேரிமிகு குழலியொடு வேடுவனாய்
வெங்கானில் விசயன்மேவு
போரின்மிகு பொறையளந்து பாசுபதம்
புரிந்தளித்த புராணர் கோயில்
காரின்மலி கடிபொழில்கள் கனிகள்பல
மலருதிர்த்துக் கயமுயங்கி
மூரிவளங் கிளர்தென்ற றிருமுன்றிற்
புகுந்துலவும் முதுதுகுன்றமே

தக்கனது பெருவேள்விச் சந்திரனிந்
திரனெச்ச னருக்கனங்கி
மிக்கவிதா தாவினொடும் விதிவழியே
தண்டித்த விமலர்கோயில்
கொக்கினிய கொழும்வருக்கை கதலிகமுகு
யர்தெங்கின் குவைகொள்சோலை
முக்கனியின் சாறொழுகிச் சேறுலரா
நீள்வயல்சூழ் முதுகுன்றமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெம்மைமிகு புரவாணர் மிகைசெய்ய
விறலழிந்து விண்ணுளோர்கள்
செம்மலரோ னிந்திரன்மால் சென்றிரப்பத்
தேவர்களே தேரதாக
மைம்மருவு மேருவிலு மாசுணநாணரி
யெரிகால் வாளியாக
மும்மதிலு நொடியளவிற் பொடிசெய்த
முதல்வனிட முதுகுன்றமே.

இழைமேவு கலையல்கு லேந்திழையா
ளொருபாலா யொருபாலெள்கா
துழைமேவு முரியுடுத்த வொருவனிருப்
பிடமென்ப ரும்பரோங்கு
கழைமேவு மடமந்தி மழைகண்டு
மகவினொடும் புகவொண்கல்லின்
முழைமேவு மால்யானை யிரைதேரும்
வளர்சாரன் முதுகுன்றமே.

நகையார்வெண் டலைமாலை முடிக்கணிந்த
நாதனிட நன்முத்தாறு
வகையாரும் வரைப்பண்டங் கொண்டிரண்டு
கரையருகு மறியமோதித்
தகையாரும் வரம்பிடறிச் சாலிகழு
நீர்குவளை சாயப்பாய்ந்து
முகையார்செந் தாமரைகண் முகமலர
வயறமுவு முதுகுன்றமே.

அறங்கிளரு நால்வேத மாலின்கீ
ழிருந்தருளி யமரர்வேண்ட
நிறங்கிளர்செந் தாமரையோன் சிரமைந்தி
னொன்றறுத்த நிமலர்கோயில்
திறங்கொள்மணித் தரளங்கள் வரத்திரண்டங்
கெழிற்குறவர் சிறுமிமார்கள்
முறங்களினாற் கொழித்துமணி செலவிலக்கி
முத்துலைப்பெய் முதுகுன்றமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதிரொளிய நெடுமுடிபத் துடையகட
லிலங்கையர்கோன் கண்ணும்வாயும்
பிதிரொளிய கனல்பிறங்கப் பெருங்கையிலை
மலையைநிலை பெயர்த்தஞான்று
மதிலளகைக் கிறைமுரல மலரடியொன்
றூன்றிமறை பாட ஆங்கே
முதிரொளிய சுடர்நெடுவாள் முன்னீந்தான்
வாய்ந்தபதி முதுகுன்றமே.

பூவார்பொற் றவிசின்மிசை யிருந்தவனும்
பூந்துழாய் புனைந்தமாலும்
ஓவாது கழுகேன மாயுயர்ந்தாழ்ந்து
உறநாடி யுண்மைகாணாத்
தேவாருந் திருவுருவன் சேருமலை
செழுநிலத்தை மூடவந்த
மூவாத முழங்கொலிநீர் கீழ்தாழ
மேலுயர்ந்து முதுகுன்றமே.

மேனியிற்சீ வரத்தாரும் விரிதருதட்
டுடையாரும் விரவலாகா
ஊனிகளா யுள்ளார்சொற் கொள்ளாது
முள்ளுணர்ந்தங் குய்மின்தொண்டீர்
ஞானிகளா யுள்ளார்கள் நான்மறையை
முழுதுணர்ந்தைம் புலன்கள்செற்று
மோனிகளாய் முனிச்செல்வர் தனித்திருந்து
தவம்புரியும் முதுகுன்றமே.

முழங்கொலிநீர் முத்தாறு வலஞ்செய்யு
முதுகுன்றத்திறையை மூவாப்
பழங்கிழமைப் பன்னிருபேர் படைத்துடைய
கழுமலமே பதியாக்கொண்டு
தழங்கொரிமூன் றோம்புதொழில் தமிழ்ஞான
சம்பந்தன் சமைத்தபாடல்
வழங்குமிசை கூடும் வகை பாடுமவர்
நீடுலக மாள்வர்தாமே.

திருச்சிற்றம்பலம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

## திருவீழிமிழலை:

**பண்: - மேகராகக்குறிஞ்சி இராகம்:- நீலாம்பரி**

திருச்சிற்றம்பலம்.

ஏரிசையும் வடவாலின் கீழிருந்தங்
கீரிருவர்க் கிரங்கிநின்று
நேரியநான் மறைப்பொருளை யுரைத்தொளிசேர்
நெறியளித்தோன் நின்றகோயில்
பாரிசையும் பண்டிதர்கள் பன்னாளும்
பயின்றோது மோசைகேட்டு
வேரிமலி பொழிற்கிள்ளை வேதங்கள்
பொருட்சொல்லு மிழலையாமே.

பொறியரவ மதுசுற்றிப் பொருப்பேமத்து
ஆகப்புத் தேளிர்கூடி
மறிகடலைக் கடைந்திட்ட விடமுண்ட
கண்டத்தோன் மன்னுங்கோயில்
செறியிதழ்த்தா மரைத்தவிசிற் றிகழ்ந்தோங்கு
மிலைக்குடைக்கீழ்ச் செய்யார்செந்நெல்
வெறிகதிர்ச்சா மரையிரட்ட விளவன்னம்
வீற்றிருக்கும் மிழலையாமே.

எழுந்துலகை நலிந்துழலு மவுணர்கள்தம்
புரமூன்று மெழிற்கணாடி
உழுந்துருளு மளவையினொள் ளெரிகொளவெஞ்
சிலைவளைத்தோ னுறையுங்கோயில்
கொழுந்தரள நகைகாட்டக் கோகநத
முகங்காட்டக் குதித்துநீர்மேல்
விழுந்தகயல் விழிகாட்ட விற்பவளம்
வாய்காட்டு மிழலையாமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரைசேரு மெண்பத்து நான்குநூ
றாயிரமாம் யோனிபேதம்
நிரைசேரப் படைத்தவற்றி னுயிர்க்குயிரா
யங்கங்கே நின்றான்கோயில்
வரைசேரும் முகின்முழவ மயில்கள்பல
நடமாட வண்டுபாட
சிரைசேர்பொன் னிதழிதர மென்காந்தள்
கையேற்கு மிழலையாமே.

காணுமா றரியபெரு மானாகிக்
காலமாய்க் குணங்கள் மூன்றாய்ப்
பேணுமூன் றுருவாகிப் பேருலகம்
படைத்தளிக்கும் பெருமான் கோயில்
தாணுவாய் நின்றபர தத்துவனை
யுத்தமனை யிறைஞ்சீரென்று
வேணுவார் கொடிவிண்ணோர் தமைவிளிப்ப
போலோங்கு மிழலையாமே.

அகனமர்ந்த அன்பினரா யறுபகைசெற்
றைம்புலனு மடக்கிஞானம்
புகலுடையோர் தம்முள்ளப் புண்டரிகத்து
ள்ளிருக்கும் புராணர்கோயில்
தகவுடைநீர் மணித்தலத்துச் சங்குளவர்க்
கந்திகழச் சலசத்தீயுள்
மிகவுடைய புன்குமலர்ப் பொரியட்ட
மணஞ்செய்யு மிழலையாமே.

ஆறாடு சடைமுடிய னனலாடு
மலர்க்கையன் இமயப்பாவை
கூறாடு திருவுருவன் கூத்தாடுங்
குணமுடையோன் குளிருங்கோயில்
சேறாடு செங்கழுநீர்த் தாதாடி
மதுவுண்டு சிவந்தவண்டு
வேறாய வுருவாகிச் செவ்வழிநற்
பண்பாடு மிழலையாமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பமிகு முடலடர்த்துக் காலூன்றிக்
கைமறித்துக் கயிலையென்னும்
பொருப்பெடுக்க லுறுமரக்கன் பொன்முடிதோள்
நெரித்தவிரற் புனிதர்கோயில்
தருப்பமிகு சலந்தரன்ற னுடல்தடிந்த
சக்கரத்தை வேண்டியீண்டு
விருப்பொடுமால் வழிபாடு செய்யவிழி
விமானஞ்சேர் மிழலையாமே.

செந்தளிர்மா மலரோனுந் திருமாலும்
ஏனமோ டன்னமாகி
அந்தமடி காணாதே யவரேத்த
வெளிப்பட்டோ னமருங்கோயில்
புந்தியினால் மறைவழியே புற்பரப்பி
நெய்சமிதை கையிற்கொண்டு
வெந்தழலின் வேட்டுலகின் மிக அளிப்போர்
சேருமூர் மிழலையாமே.

எண்ணிறந்த அமணர்களு மிழிதொழில்சேர்
சாக்கியரும் என்றுந்தன்னை
நண்ணரிய வகைமயக்கித் தன்னடியார்க்கு
அருள்புரியும் நாதன்கோயில்
பண்ணமரும் மென்மொழியார் பாலகரைப்
பாராட்டு மோசைகேட்டு
விண்ணவர்கள் வியப்பெய்தி விமானத்தோ
டுமிழியு மிழலையாமே.

மின்னியலும் மணிமாட மிடைவீழி
மிழலையான் விரையார்பாதம்
சென்னிமிசைக் கொண்டொழுகுஞ் சிரபுரக்கோன்
செழுமறைகள் பயிலுநாவன்
பன்னியசீர் மிகுஞான சம்பந்தன்
பரிந்துரைத்த பத்துமேத்தி
இன்னிசையாற் பாடவல்லா ரிருநிலத்தில்
ஈசனெனு மியல்பினோரே.

**திருச்சிற்றம்பலம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருக்கச்சியேகம்பம்

**பண்:- மேகராகக்குறிஞ்சி** **இராகம்:- நீலாம்பரி**

**திருச்சிற்றம்பலம்.**

வெந்தவெண் பொடிப்பூசு மார்பின் விரிநூலொருபால் பொருந்தக்
கந்தமல்கு குழலியோடுங் கடிபொழிற் கச்சிதன்னுள்
அந்தமில் குணத்தா ரவர்போற்ற அணங்கினொ டாடல்புரி
எந்தை மேவிய ஏகம்பந் தொழுதேத்த இடர்கெடுமே.

வரந்திகழு மவுணர் மாநகர்மூன் றுடன்மாய்ந் தவியச்
சரந்துரந் தெரிசெய்த தாழ்சடைச் சங்கரன் மேயவிடம்
குருந்த மல்லிகை கோங்குமா தவிநல்ல குராமரவம்
திருந்துபைம் பொழிற்கச்சி யேகம்பஞ்சேரஇடர்கெடுமே.

வண்ணவெண் பொடிப்பூசு மார்பின் வரியரவம்புனைந்து
பெண்ணமர்ந் தெரியாடல் பேணிய பிஞ்ஞகன் மேயவிடம்
விண்ணமர் நெடுமாட மோங்கி விளங்கிய கச்சிதன்னுள்
திண்ணமாம் பொழில்சூழ்ந்த ஏகம்பஞ் சேர இடர்கெடுமே.

தோலுநூ லுந்துதைந்த வரைமார்பிற்சுடலைவெண்ணீறணிந்து
காலன்மாள் வுறக்காலாற் காய்ந்த கடவுள் கருதுமிடம்
மாலைவெண் மதிதோயு மாமதிற் கச்சி மாநகருள்
ஏலநாறிய சோலைசூ ழேகம்ப மேத்த இடர்கெடுமே.

தோடணிம் மலர்க்கொன்றை சேர்சடைத்தூமதியம்புனைந்து
பாடல்நான் மறையாகப் பல்கணப் பேய்க ளவைசூழ
வாடல்வெண் டலையோ டனலேந்தி மகிழ்ந்துடனாடல்புரி
சேடர்சேர் கலிக்கச்சி யேகம்பஞ் சேர இடர்கெடுமே.

சாகம்பொன் வரையாகத் தானவர் மும்மதில் சாயவெய்து
ஆகம்பெண் ணொருபாக மாக அரவொடு நூலணிந்து
மாகந்தோய் மணிமாட மாமதிற் கச்சி மாநகருள்
ஏகம்பத் துறையீசன் சேவடி யேத்த இடர்கெடுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாணிலா மதிபுல்கு செஞ்சடை வாளர வம்மணிந்து
நாணிடத் தினில்வாழ்க்கை பேணி நகுதலையிற் பலிதேர்ந்
தேணிலா அரக்கன்றன் நீள்முடி பத்து மிறுத்தவனூர்
சேணுலாம் பொழிற்கச்சி யேகம்பஞ் சேர இடர்கெடுமே.

பிரமனுந் திருமாலுங் கைதொழப் பேரழ லாயபெம்மான்
அரவஞ் சேர்சடை யந்தண னணங்கினொ டமருமிடம்
கரவில்வண் கையினார்கள் வாழ்கலிக் கச்சி மாநகருள்
மரவஞ்சூழ் பொழிலேகம் பந்தொழ வல்வினை மாய்ந்தறுமே.

குண்டுபட் டமணா யவரொடுங் கூறைதம் மெய்போர்க்கும்
மிண்டர் கட்டிய கட்டுரை யவைகொண்டு விரும்பேன்மின்
விண்டவர் புரமூன்றும் வெங்கணை யொன்றினாலவியக்
கண்டவன் கலிக்கச்சி யேகம்பங் காண இடர்கெடுமே.

ஏரினார் பொழில்சூழ்ந்த கச்சி யேகம்ப மேயவனைக்
காரினார் மணிமாட மோங்கு கழுமல நன்னகருள்
பாரினார் தமிழ்ஞான சம்பந்தன் பரவிய பத்தும் வல்லார்
சீரினார் புகழோங்கி விண்ணவ ரோடுஞ் சேர்பவரே.

திருச்சிற்றம்பலம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பறியலூர் வீரட்டம்

**பண்:-மேகராகக்குறிஞ்சி** **இராகம்:-நீலாம்பரி**

**திருச்சிற்றம்பலம்.**

கருத்தன் கடவுள் கனலேந் தியாடும்
நிருத்தன் சடைமேல் நிரம்பா மதியன்
திருத்த முடையார் திருப்பறி யலூரில்
விருத்த னெனத்தகும் வீரட்டத் தானே.

மருந்த னமுதன் மயானத்துள் மைந்தன்
பெருந்தண் புனற்சென்னி வைத்த பெருமான்
திருந்து மறையோர் திருப்பறி யலூரில்
விரிந்த மலர்ச்சோலை வீரட்டத் தானே

குளிர்ந்தார் சடையன் கொடுஞ்சிலை விற்காமன்
விளிந்தா னடங்க வீந்தெய்தச் செற்றான்
தெளிந்தார் மறையோர் திருப்பறி யலூரில்
மிளிர்ந்தார் மலர்ச்சோலை வீரட்டத் தானே.

பிறப்பாதி யில்லான் பிறப்பார் பிறப்புச்
செறப்பாதி யந்தஞ் செலச்செய்யுந் தேசன்
சிறப்பா டுடையார் திருப்பறி யலூரில்
விறற்பா ரிடஞ்சூழ வீரட்டத் தானே.

கரிந்தா ரிடுகாட்டி லாடுங்க பாலி
புரிந்தார் படுதம் புறங்காட் டிலாடும்
தெரிந்தார் மறையோர் திருப்பறி யலூரில்
விரிந்தார் மலர்ச்சோலை வீரட்டத் தானே.

அரவுற்ற நாணா அனலம்ப தாகச்
செருவுற் றவர்புரந் தீயெழுச் செற்றான்
தெருவிற் கொடிசூழ் திருப்பறி யலூரில்
வெருவுற் றவர்தொழும் வீரட்டத் தானே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நரையார் விடையான் நலங்கொள் பெருமான்
அரையா ரரவ மழகா அசைத்தான்
திரையார் புனல்சூழ் திருப்பறி யலூரில்
விரையார் மலர்ச்சோலை வீரட்டத் தானே.

வளைக்கும் மெயிற்றின் னரக்கன் வரைக்கீழ்
இளைக்கும் படிதா னிருந்தேழை யன்னம்
திளைக்கும் படுகர்த் திருப்பறி யலூரில்
விளைக்கும் வயல்சூழுந்த வீரட்டத் தானே.

விளங்கொண் மலர்மே லயன்ஓத வண்ணன்
துளங்கும் மனத்தார் தொழத்தழ லாய்நின்றான்
இளங்கொம் பனாளோ டிணைந்தும் பிணைந்தும்
விளங்குந் திருப்பறியல் வீரட்டத் தானே.

சடையன் பிறையன் சமண்சாக் கியரோ
டடையன் பிலாதா னடியார் பெருமான்
உடையன் புலியி னுரிதோ லரைமேல்
விடையன் திருப்பறியல் வீரட்டத் தானே.

நறுநீ ருகுங்காழி ஞானசம் பந்தன்
வெறிநீர்த் திருப்பறியல் வீரட்டத் தானைப்
பொறிநீ டரவன் புனைபாடல் வல்லார்க்
கறுநீ டவல மறும்பிறப் புத்தானே.

திருச்சிற்றம்பலம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பராய்த்துறை

பண்:- மேகராகக்குறிஞ்சி இராகம்:-நீலாம்பரி

திருச்சிற்றம்பலம்.

நீறுசேர்வதொர் மேனியர்நேரிழை
கூறுசேர்வதொர் கோலமாய்ப்
பாறுசேர்தலைக் கையர்பராய்த்துறை
ஆறுசேர்சடை அண்ணலே.

கந்தமாமலர்க் கொன்றைகமழ்சடை
வந்தபூம்புனல் வைத்தவர்
பைந்தண்மாதவி சூழ்ந்தபராய்த்துறை
அந்தமில்ல அடிகளே.

வேதர்வேதமெல் லாமுறையால்விரித்
தோதநின்ற வொருவனார்
பாதிபெண்ணுரு வாவர்பராய்த்துறை
ஆதியாய அடிகளே.

தோலுந்தம்மரை யாடைசுடர்விடு
நூலுந்தாமணி மார்பினர்
பாலுநெய்பயின் றாடுபராய்த்துறை
ஆலநீழ லடிகளே.

விரவிநீறுமெய் பூசுவர்மேனிமேல்
இரவில்நின்றெரி யாடுவர்
பரவினாரவர் வேதம்பராய்த்துறை
அரவமார்த்த அடிகளே.

மறையுமோதுவர் மான்மறிக்கையினர்
கறைகொள்கண்ட முடையவர்
பறையுஞ்சங்கு மொலிசெய்பராய்த்துறை
அறையநின்ற அடிகளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடையுமேறுவர் வெண்பொடிப்பூசுவர்
சடையிற்கங்கை தரித்தவர்
படைகொள்வெண்மழு வாளர்பராய்த்துறை
அடையநின்ற அடிகளே.

தருக்கின்மிக்க தசக்கிரிவன்றனை
நெருக்கினார் விர லொன்றினால்
பருக்கினாரவர் போலும்பராய்த்துறை
அரக்கன்றன்னை அடிகளே.

நாற்றமாமல ரானொடு மாலுமாய்த்
தோற்றமும்மறி யாதவர்
பாற்றினார்வினை யானபராய்த்துறை
ஆற்றல்மிக்க அடிகளே.

திருவிலிச்சில தேரமணாதர்கள்
உருவிலாவுரை கொள்ளேலும்
பருவிலாலெயி லெய்துபராய்த்துறை
மருவினான்றனை வாழ்த்துமே.

செல்வமல்கிய செல்வர்பராய்த்துறைச்
செல்வர்மேற்சிதை யாதன
செல்வன் ஞானசம் பந்தனசெந்தமிழ்
செல்வமாமிவை செப்பவே.

**திருச்சிற்றம்பலம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்.

# தேவார திருவாசகங்கள் தியானத்துக்கு இன்றியமையாதன

இறைவழிபாடு தன்னைப் பற்றியோ, பிறரைப் பற்றியோ வேண்டுதல், ஆராதனை, தியானம் என மூன்று வகைப்படும். துன்ப நீக்கம் அல்லது இன்ப ஆக்கம் ஆகிய இவற்றில் ஏதாவது ஒன்றைத் தனக்காக பிரார்த்தனை செய்தல் முதலாவதான வேண்டுதற் பகுதியாகும். கடவுளைப் பற்றியோ அல்லது மனித வடிவில் வந்த கடவுள் அவதாரங்களைப் பற்றியோ பக்தி பூர்வமான கிரியைகளால் அறிவு உணர்வு, விருப்பம், கற்பனைத் திறங்கள் செறிய ஆராதிப்பதே இரண்டாவதான ஆராதனை ஆகும். இறைவனுடைய அருள் வெளிக்குள் செல்லத் தன்னைத் தயார் செய்துகொண்டும் தனது உள்ளும் புறமும் அருள் எல்லையாகவே இருக்கும்படி செயலாற்ற மௌன நிலையில் விழிப்புடன் இருக்கும் உயர்ந்த நிலை மூன்றாவதான தியானம் எனப்படும்.

இவற்றைவிட ஏதாவது ஒரு காரணம் பற்றி தம் [illegible] அதை நிறைவேற்றுமாறு வேண்டி செய்கின்ற பூசை காமிகப் பூசை ஆகும். இந்த வகையிலே நாடு நலம் பெறவும், வேண்டிய விளைச்சலைப் பெறவும், கால் நடைகள் உயிர் இனங்கள் நலமுடன் வாழவும், அத்தியாவசியமானது மழையாகும். மாரிபொய்க்கும் காலங்களில் அது குறைவறப்பொலிய வேண்டி ஓதத்தக்க திருமுறைகளே மழைப்பதிகங்களாகும். இந்த மழைப்பதிகங்களை காலத்திற்குக் காலம் தவறாது அன்புருகும் சிந்தையராகி வந்தித்து ஓதிவரின் மாதம் மும்மாரி பெய்யும் என்பது திண்ணம். அத்தகைய நலத்தை நம்மக்கள் பெறவேண்டும் என்ற உயரிய நோக்கத்தோடு இப்பதிப்பு வெளிவருகின்றது. சைவசமயிகள் ஒவ்வொருவரும் இதனை வாங்கி தத்தமது வீடுகளில் இருந்து அமைதியாக ஓதிப்பயன்பெறுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

*அகில இலங்கைத் திருமுறை மன்றப் பொருளாளர்.*

*க. கு. க – சிவபாலன்*
*அடியார்க்கு அமுதூட்டும் அண்ணாலார்*

அன்பளிப்பு விலை:- ரூபா 30/=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org